# ஓசை

PUBLIC LIBRARY
JAFFNA

வைகாசி - 2014

காலாண்டு கவிதைச் சிற்றிதழ்

குரல் : 09 இசை : 26

30 MAY 2014


*இனிய கவி ஓசையின்*
*இருபத்தாறாவது இதழ்..... இது*
*இடைக்கிடையே*
*இடர்கள் நேர்ந்தாலும்*
*உங்கள் இதயங்களில்*
*இடம்பிடிக்க*
*தொடர்ந்தும் ஒலிக்கும்........*

*காகிதங்களில் மட்டுமல்லாது*
*காற்றின் அலைகளிலும், இன்று*
*கணக்கற்ற வகையில்*
*கவிதைகளின் வரவு*
*களிப்பையூட்டுகின்றன.*

*இதில் ஓசையும்*
*காத்திரமாக ஒலிக்க*
*உங்கள் கவிதைகளை*
*கவித்துவமாகவும்*
*சுருக்கமாகவும்....*
*கருத்தாழமுடன்*
*ஆக்கி அனுப்புங்கள்*

*உங்கள் ஆதரவுக்கரங்கள்*
*ஓசையின் வளர்ச்சியில்*
*என்றும் இணைந்திருக்கட்டும்*

ஆசிரியர்




3/6/2014

ஆசிரியர் : மூதூர் முகைதீன்

வெளியீடு : மூதூர் கலை, இலக்கிய ஒன்றியம்
நோக்ஸ் வீதி, மூதூர் - 05

**மனிதநேயம் மண்ணில் மலர ஒலிக்கும் ஓசை**

30/=

# 'ஓசை'- கவிதைச் சிற்றிதழ்

'ஓசை' என்றொரு கவிதைக் சிற்றிதழ் மூதூர் - 5, நொக்ஸ் வீதி என்ற முகவரியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. மூதூர் கலை, இலக்கிய ஒன்றியம் வெளியிட்டு வரும் இந்தக் காலாண்டுச் சிற்றிதழுக்கு ஆசிரியர் மூதூர் முகைதீன்.

தொடர்நது கவிதை எழுதி வரும் அறியப்பட்டவர்களும் புதியவர்களும் 20 பக்கங்களில் வரும் இவ்விதழில் எழுதி வருகிறார்கள். இதன் 20வது இதழ் அண்மையில் வெளிவந்திருக்கிறது. இவ்விதழில் தாமரைத் தீவான், அ.கௌரிதாசன், யாழினி, ஏ.எம்.எம்.அலி, தொன்மையூர் கவிராயர், ஷெல்லிதாசன், நீலா பாலன், எம்.எம் அலி அக்பர், சி. சிவரஞ்சனி, மருதூர் ஜமால்தீன், ஏ.சி.ஜரீனா முஸ்தபா, வெலிப்பன்ன அத்தாஸ், எம்.வை.எம்.மீஆத், பி.ரி.அஸீஸ், ஏறாவூர் தாஹிர், மூதூர் கலைமேகம், ஏ.எம்.ஹஸ்புள்ளா, வீ.எம்.அன்சார், பூபதி புலேந்திரராஜா, சீ.என்.துரைராஜா, செல்வி பாஹிமா ஆகியோர் பங்களித்திருக்கிறார்கள்.

பலஸ்தீனக் கவிஞர் ஆமினா கசக், மற்றும் தென் இந்தியக் கவிஞர்களின் கவிதைகள் சிலவும் மீள எடுத்தாளப்பட்டுள்ளன. கவிதை அனுபவம் உள்ள கவிஞர்கள் அநேகமாக இவ்வாறான சிற்றிதழ்களில் பங்கு கொள்வது குறைவு. ஆயினும் இந்தச் சஞ்சிகையில் மூத்த கவிஞர்கள் அநேகர் பங்களிப்பதன் மூலம் அவர்களது கவிதைகளை வளரும் கவிஞர்கள் படிக்கவும் நல்ல கவிதானுபவம் பெறவும் வாய்ப்பு உண்டு.

பல மூத்த எழுத்தாளர்கள் இளையவர்களைத் தங்களது புகழ் பாடுவதற்கே அநேகமாகவும் பயன்படுத்துவார்கள். மூதூர் முகைதீன் ஓர் இளைய அணியை உருவாக்கவும் வளர்த்து விடவும் இவ்விதழ் மூலம் வழிகாட்டி வருகிறார்.

கலை, இலக்கியம் இணையத்துக்கு வந்து நீண்ட காலமாயிற்று, கவிதைகளை கவிதைசார் ஆக்கங்களை இந்த இதழுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பும் வாய்ப்பு இன்னும் ஏற்படுத்தப்படவில்லை என்பது ஒரு பின்னடைவுதான். அவ்வாறு மின்னஞ்சல் ஒன்றை இவ்விதழ் தனக்கெனத் திறக்குமாயின் மேலும் பலர் ஆக்கங்களை அனுப்ப வசதியாக இருக்கும். இதை . மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் கவனிக்க வேண்டும்.

கவிதை சிற்றிதழ் ஒன்று – அது என்ன வடிவாக இருந்த போதும் 25 இதழ்களைத் தொடுவது சாதாரணமான விடயமல்ல. இந்த முயற்சி தொடர கவிஞர்களும் தமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்.

**(ஓசையின் 25வது இதழுக்காக 04.04.2014ம் திகதி நவமணியில் வெளியான விமர்சனக்குறிப்பு)**

# மூவாக்கன்னி

குன்றாத நல் இளங் கன்னி - தமிழ்
குறையாத வளமுள்ள கூட்டுமுக்கூறு!
என்றிங்கு வந்தவள் என்றே - இன்றும்
எவருக்கும் தெரியாத இன்பப்புதையல்!

பன்னிரண்டாவியோ டுள்ளாள் - அவள்
பதினெட்டு மெய்யுடன் பாராளவந்தாள்!
சொன்ன முப்ப தெழுத்தோடும் - யாரும்
சொல்லாதவற்றையும் சொல்லும் திறத்தாள்!

மூச்சாக நின்றெம்மைக் காப்பாள் - நாமும்
மூவாத தாயான கன்னியைக் காப்போம்!
பேச்சென்ன - எழுத்தென்ன? நா – கை - காட்டும்
பேரிசைப் பாட்டென்ன-செய்யுட்களென்ன?

எட்டென்ன - பத்தென்ன யாவும் - இவள்
ஈடிணையற்றவள் என்பதைக்காட்டும்!
தொட்டால் விடாதே தொடர்வாள் - இவள்
தோல்வியே காணாது வெற்றியே கண்டாள்!

வள்ளுவன் தன்னிடம் சென்றே - என்றும்
வாழ்குறளாகிய முப்பாலைத்தந்தாள்!
தெள்ளுகுறள் தந்த தாலே - எல்லாத்
தேயத்தரும் நம்மைத் தெரிய வைத்துள்ளாள்!

இவளைக் கெடுத்திடப்பல்லோர் - நட்டில்
எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை!
அவளைக் கெடுத்திட நாமும் - எம்மை
அறியாமலே இன்றும் அழிவு செய்கின்றோம்!

ஒரு சிலர் மட்டுமே நம்முள் - நம்தாய்
உண்மை அழகை உணர்த்தி மகிழ்ந்தார்!
பெரிதுமே போற்றியே காத்த – அன்பின்
பிற வெளியாரையும் மறந்திடுகின்றோம்!

இனியேனும் திருந்திடுவோமா? - நம்தாய்
எழிலைக்கறைப்படுத் தாதிருப்போமா?
கனி பால் தேன் கன்னலின்சாற்றை - ஒன்றும்
கலவாமல் தனியாய்ச் சுவைத்திருப்போமா?

"தாமரைத் தீவான்"

# நறுக்குகள்!

இராப் பகல்களும்,
இரா ராத்திரிகளும்
இராப் பகல்களாய்
இராட்டினம் போன்று
சுற்றிச் சுழன்றவாறு!

பட்டமோ, பதவியோ,
பணமோ இருப்பின்.....
உனக்கு
எவரையும் தெரியாது!
எதுவும் அற்றபின்,
உன்னை
எவருக்கும் தெரியாது!

நெருங்கிய தோழன்
நெருங்க மறுத்தால்....
அவனை விட, நீ
உயர்ந்திருப்பாய்!
அன்றேல்,
உன்னை விட, அவன்
உயர்ந்திருப்பான்!

'செல்வோம்' என்பதன்
திரிபே செல்வம்!
'தரித்திரோம்' என்பதன்
திரிபே தரித்திரம்!

ஏறாவூர் தாஹிர்

# ஒப்பனைகள்!

வாக்குறுதியின்
மகிமை தெரியாதவர்களெல்லாம்
மேடைகளில்
வாக்குறுதிகளை
அள்ளி வீசுகிறார்கள்!

மனிதநேயம்
துளியுமற்றவர்களெல்லாம்
அதைப்பற்றி
கதையாய்ப்
பேசுகிறார்கள்!
ஏழைகளைப் பார்த்து
நக்கலாக சிரிக்குமவர்கள்
தம் முன்னைய
வாழ்க்கையைப்பற்றி
சிந்திக்கவேயில்லை!

அகம்பாவத்தை
அகம் முழுவதும் சுமந்துகொண்டு
ஆன்மீகம் பேசுவது
வேடிக்கையாக இருக்கிறது!

மனிதத்தனமற்று
நடக்குமவர்கள்
மகான் என்று
தன்னை சொல்லிக்கொள்வதும்
வாடிக்கையாக இருக்கிறது!

அவர்களின்
முகத்திற்கும் அகத்திற்கும்
சம்பந்தமேயில்லாத பின்
ஒப்பனைகள் மட்டும் எதற்கு
அகற்றி விடட்டும்!!!

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# நீயும் கவிஞன்தான்

'கவிஞன்' என்னும் பெயரைக்
கொள்ள வழியைக் கேட்டாய்
புவியில் நீயும் கவியாய்ப்
புகழுற வழிகள் சொல்வேன்.

புரியாத வார்த்தை சேர்த்து
புதுக் கவிதை எழுது!
விரிவாய் எழுதி விடாதே!
விளக்கம் தேவை யில்லை.

பத்திரி கைக்கு அனுப்பி
பிரசுர மாகாத போதும்
அத்தனை கவியையும் சேர்த்து
அழகாய் நூலாய் ஆக்குநீ.

புலம்பல் தனையே கவியில்
புகுத்த மறந்து விடாதே!
குழம்பி விட்ட வாசகர்
குற்றம் சொன்னால் ஏற்காதே!

"பின்னவீ னத்துவம்" என்று
பிதற்றி வாதிடு! அதில்
உன்னை உயர்த்திப் பேசினால்
உந்தன் 'உளரல்' எடுபடும்!

ஆக்கிய நூலை வெளியிட!
அழைத்திடு கவிஞரை! கவிதை
வாக்கியம் பிழையே என்றாலும்
வாழ்த்திப் புகழ்வார் உன்னையே

எழுதிய உந்தன் புலம்பலை!
ஏற்பார் 'கவிதை' என்று!
"பழுதிலை" என்று சொல்லி!
பாராட்டுப் பத்திரம் தருவார்.

கவிதைப் புத்தகம் வாங்கி!
காசும் கையில் தருவார்.
குவிந்த கவிஞர் எல்லாம்
'கூட்டாளி' ஆகியே விடுவார்

புகழும்! பெயரும் உந்தன்!
புலம்பல் பெற்றுத் தந்திடும்
நிகழும் இதெலாம்! பிறகு
நீயும் 'கவிஞன்' தானடா!

**வி.எம்.அன்ஸார்**
கிண்ணியா-02

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால்
ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப்பா நீ!

**பாரதிதாசன்**

# வினையினால் பயனென்ன?

போட்டிகளில்லையென்று
புதிய தீக் கொள்கையோடு
ஆட்டியே விட்டு வாழ்வில்
அலைந்திட வைப்பதற்காய்
நாட்டிய மாடும் பலர்கள்
நரியென இனப்பகையால்
வாட்டிட வைக்க முனையும்
வினையினால் பயன்களெென்ன?

ஓடியே வுழைத்து நாட்டை
உயர்த்திட வுதவிசெய்து
தேடிய வாழ்வு காண
தேவையா முறவு பேணி
கூடியாம் வாழ்ந்து நேர்மைக்
கொள்கையில் இணைந்திருந்தும்
வாடியே விட்டோ மிந்த
வஞ்சினர் செய்கையாலே!

உண்மையைக் கொன்றுவிட்டு
உயர்ந்திடயெண்ணம் பூண்ட
கண்ணியக் கொள்கையில்லா
கயவர்கள் ஓழியுமட்டும்
புண்ணிய வாழ்வுயெம்மில்
புகுந்திட வழியுமேது
எண்ணியிங்குழைப்பவர்கள்
ஏனின்று மௌனியானார்?

அறிவினைக்
கொண்டோர்நெஞ்சம்
அழுதிடும் நிலைமையாகி
பறிமுதல் ஆகிப்பாசம்
வேஷமாய் ஆகியின்று
குறியாய்ச் சிறு இனத்தின் மீது
கொடுமை கட்டவிழ்த்து தன்
நெறியதை மாற்றி வாழ்வில்
நீதியைச் சாகடித்தார்!

வந்தனை செய்து வாட்டும்
வதைகளைப் புரிய வேண்டாம்
வெந்து நல்மனமும் நோகும்
வெறுப்பினை யொழிப்பீரன்பில்
பந்தமும் ஒற்றுமையோங்க
பதியிலே உழைக்க முயலு
நிந்தனையகலும் நாட்டில்
நன்மைசெய் சமுகமோங்கும்!

**மருதூர் ஜமால்தீன்**

**எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று
கொட்டு முரசே – வாழ்வில்
கட்டுத் தொலைந்ததென்று
கொட்டு முரசே!**

**-பாரதிதாசன் -**

# ஜய வருடதாயே

“செங்கதிரொன் ஒளி என்றும்
சிவந்து பூமியில் பட
மங்கையர் எல்லாம் மாண்புடன்
மங்கள நீராடல் செய்து
திங்கள் ஒளி யேற்றி
திசையெல்லாம் பாட்டொலி எழுப்பி
எங்கள் சித்திரைப் பெண்ணை
வரவேற்கும் காட்சி காணீர்”

“புத்தம் புதியபுடவை உடுத்து
பூந்தளிர் மலர்மாலை சூடி
இத்தரை மாந்தர் எழில்காட்ட
எங்கும் தமிழர் முத்தம்சிறக்க
ஜய வருட சித்திரை தாயே
நலம்கொள மாந்தர் கூட்டம்
வேதவல்லி சித்திரைதாயே விரைந்துவா”

“கல்வி செல்வம் வீரம்
களம் அமைத்து தந்தாய்
சொல்லால் செயலால் மனித
துயர்துடைக்கும் நாயகியே ஜய
பல்லாயிரம் ஆண்டும் பூமியில்
பவனிவரும் புது தென்றலாய்
நில்லாது மனிதவாழ்வில் நீடூழி
நிற்பவளே சித்திரைதாயே வருவாய்”

**கலாபூஷணம் அன்பூரான் அன்புவழிபுரம்**

**சி.என்.துரைராஜா**

# பூக்கள்

பூக்களே வாருங்கள்
குயில்களோடு
பாடுவோம்!

புட்களே பறவுங்கள்
மயில்களோடு
அடுவோம்!

உளிகளே விழியுங்கள்
சிற்பங்களை
தீட்டுவோம்!

உரிமைகளே
இணையுங்கள்
தீமைகளை
விரட்டுவோம்!

நதிகளே பாயுங்கள்
வயல்களோடு
வாழுவோம்!

கிளிகளே பேசுங்கள்
கீழ்மைகளை
கலைப்போம்!

கடமைகளே உதவுங்கள்
இலஞ்சங்களை
புதைப்போம்!

காடுகளே வளருங்கள்
மழையோடு
மகிழ்வோம்

**நல்லை அமிழ்த்தன்**

# புதிய அனுபவம்

நீண்டக் கால
ஆவலில்...
ஆரம்பமான....
பயணம் இது!

கலைஞர்களால்....
கவிஞர்களால்.....
அலங்கரிக்கப்பட்டு
புதுப் பொலிவுடன்
மிளிர்கின்ற
நகரம் இது!
அன்பு நிறைந்த உள்ளங்களும்...
பண்பு நிறைந்த இதயங்களும்.....
இனிமையான வரவேற்பும்

இதமான உபரிப்பும்
என.....
எல்லாமாக ஒன்றிணைந்த ஓர்
அற்புத பூமி இது!
கிண்ணியாத் தாயே..!!!
உன் மடி மீது
எத்தனை சிறப்பு!
நம்மை
வரவேற்பதில் உனக்கு
எத்தனை களிப்பு!
எதிர்பார்க்கவேயில்லை
உனது
இத்தகைய வரவேற்பை!
பூரித்துப் போனோம்.!!
மறக்க முடியாது!
இனிமை மிகு
அந்த நாட்களை!!

என்றென்றும்
தித்திக்கும் தேனாக
இனிக்கிறது
நமது கிண்ணியா பயணம்
மறக்க முடியாத
ஓர் புது அனுபவமாக!!

ஏ.சி.ஜரீனா முஸ்தபா
வெளிவிட்ட

## நினைவில் இல்லையே!

**இதுவரை எத்தனையோ**
**பள்ளிவாயல்களில் இறையோனை**
**தொழுது கொண்டிருக்கிறேன்**
**பக்கத்தில் இருந்தவர்**
**ஒருவரின் முகம் கூட நினைவில்**
**இல்லையே!**



கலாபூஷணம்
எம்.எம்.அலி.அக்பர்
கிண்ணியா

# மனிதனைத் தேடி!......

வாசலோரம் பூத்தசெடி
வாடிக் காயுது - எல்லாம்
வந்திடும்பார் என்றகதை
நீண்டே போகுது.
ஆசையாக ரசித்ததெல்லாம்
கருகிச் சாகுது - வேகும்
அனல் தணித்து மனிதம்வாழ
என்ன இருக்குது?.......

அது இதென்று தொடர்ந்ததெல்லாம்
அரை குறையோடே - நாங்கள்
அமுங்கி அமுங்கி நசுங்கிக் கசங்கி
துயர் நெருப்போடே
சிதையிலேயே மனிதம் இருக்கு
அடவு நகைகள் போல் - அந்தச்
சிறை உடைத்து மீட்டெடுக்க
எவர்தான் முயல்கிறார்.

எல்லோருமே விலாசம்தேடி
அலைந்து திரிகிறார் - சிலர்
'இங்கிலிஷில்' பொய்கள் பேசி
ஏய்த்துப் பிழைக்கிறார்
கல்லுமுள்ளில் மனிதன்நடந்து
கஷ்டப் படுகிறான்-மனக்
காயம் ஆறும் மருந்துக்காக
ஓயா தலைகிறான்.

புத்திமதி சொல்லவென்றால்....
கூடி விடுகிறார் - உதவி
புரியக்கேட்டால் எங்கோ ஓடி
மறைந்து கொள்கிறார்
எத்தனைபேர் நமக்குள் இன்னும்
மனிதர் இருக்கிறார் - தேடி
எடுக்க முனைந்தால்
ஒன்று ரெண்டே தேறும்
தேடிப் பார்.

இன்று நாளை என்று என்று
காலம் ஓடுது – அந்த
இன்று.. என்று ... என்றுதீர்வு
காண்ப தென்றுநாம்?
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
என்பர் கற்றவர் - நாங்கள்
ஒன்றுபட்டு வாழ்வதென்று....
எந்தநாள் அது?........

நீலா பாலன்

**நாள், ஒரு நாள் மலரும்! – அது**
**நாளை உதயத்தோடு!**
**தோழமையில் மனிதர் - ஒரு**
**தோகை விழி யாவார்!**
**கூழ் துளியே எனினும் - அவர்**
**கூடிக்கல மருந்தும்**
**வேளை மிக விரையும்! – என்**
**வேட்கை அன்று விடியும்!**
**நாள், ஒரு நாள் மலரும்**

புரட்சிக் கமால்

# பாதிக் கவிதை

கடிகாரத்தோடு
மூச்சிறைக்க ஓடுவதாய்
கால் முளைத்த
நாட்கள்...

ஜன்னல் அடைக்கப்பட்ட
நிலவு....
இழுத்து மூடப்பட்ட
நட்சத்திரங்கள்......
மல்லார்ந்து பார்க்காத
பூக்கள்....

அவசர வேலையோடு
சிட்டாய்ப் பறக்கும்
பறவைகள்....
வருகை தந்தும்
வரவேற்கப்படாத
வண்ணத்துப் பூச்சிகள்.

இப்படி
இயற்கைக்கும்
எனக்கும்
இடைக்கால யுத்தம்....

பக்கம் மாறிய
புத்தகம் போல்....
அன்றாட வேலைகள்.....

வேலைச் சுமையோடு
வேண்டாத
போனஸாய்
ஞாபக மறதி.....

குடிக்க மறந்த
தேநீர்க் கோப்பையில்
குளித்துக் கரையேறாத
சிற்றெறும்புகள்
எதையோ தேடும்
பொழுது
என் முன்னே
வந்து விழுகின்றது.

என்றோ ஒரு நாள்....
முடிக்கப்படாத
அவசரத்தில்
மூர்ச்சையாகிப்
போனதோர்
பாதிக்கவிதை.

**பூகொடையூர் அஸ்மா பேகம்**

*தாயால் பிறந்தேன்*
*தமிழால் வளர்ந்தேன்*
*நாயே நேற்றுன்னை*
*நடுவீதியில் சந்தித்தேன்*
*நீயார் என்னை*
*நில்லென்று சொல்வதற்கு*

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

# கொட்டு முரசே!

நல்லோர் வகுத்தவழி
நாலும் புரிந்தவழி
எல்லோர்க்கும் ஏற்றதெனக்
கொட்டு முரசே! எழில்,
இல்லார்க்கும் கிட்டுமெனக்
கொட்டுமுரசே!

பெருமகனார்!
பெருந்தவத்தின்
பெறுபேறாய் கிடைத்தவொளி
பெருவாழ்வைக் காட்டும்! எனக்
கொட்டு முரசே ! இனி,
இருள் வாழ்வு நீங்குமெனக்
கொட்டு முரசே!

மது, வட்டி, கொள்ளை, கொலை,
சதி,பழிகள்,விலைமாது...
சரிந்து, கரியுமெனக்
கொட்டு முரசே! துயர்
எரிந்தழியும் வாழ்வில் எனக்
கொட்டு முரசே!

கல்லடிகள், சொல்லடிகள்,
பொல்லடிகள் தாங்கி,நிலம்
நல்லடியார் ஆக்கியதாய்
கொட்டுமுரசே! இனி,
அவ்வடியார் வழிதொடரக்
கொட்டு முரசே!

குமுறும் மனக்கடலின்
குற்றம்,குறை களைந்து,
அமைதி அலைவிரியக்
கொட்டுமுரசே! சதா
சாந்தி மழை பொழியக்
கொட்டுமுரசே!

இனம், மொழியின்
இடைவெளிகள்
இல்லாத இலங்கையென
மனம் கனியும் வாழ்வு பெறக்
கொட்டு முரசே! சனம்
இனம் கடந்து அணிதிரளக்
கொட்டுமுரயே!

ஏறாவூர் தாஹிர்

**உள்ளத் தெளிவின் நிலவினிலே**
**ஒளிரும் நினைவாம் சுடரினிலே**
**வெள்ளப் புனலின் கலப்பினிலே**
**விடியற் பரிதி உருவினிலே**
**நாளை வருவான் ஒரு மனிதன்!**

**புரட்சிக்கமால்**

# சப்தத் தீவு

மான்கள் நீரருந்தும்
ஹார்மோனிய நதிக்கரையில்
வயலின் வாசிக்கும் மூலிகைக் காற்று!

நீருக்கு மேல் மிதக்கும்
புல்லாங்குழல் பாலத்தில்
உன்னைக்
கைபிடித்து அழைத்துச் செல்கிறேன்!

கிதாரின் செல்லத் தீண்டல்களில்
கீச்சுக் குருவிகள் சிறகுகள் சிலிர்க்கின்றன

சிறகிசை மழை
வான்பார்த்த உன்முகத்தில்
பட்டுத் தெறிக்கிறது
தபேலாவின் விரல்களால்
மொட்டுகளை சுதிகூட்டும் காற்று
உன் கண்கள் வழியாக
என் தோளைத் தொடுகிறது!

தாய்தந்தை மறந்து
ஊர் உறவு துறந்து
இடம் காலம் கடந்து
இந்தச் சப்தத் தீவில்
என்னோடு நீ
உன்னோடு நான்
நம்மோடு இளையராஜா!

(பழநிபாரதி)
(நன்றி : ஆனந்தவிகடன் 19.2.14)

# வாழ்தல்

மீனுக்காக
கண்கள் வைத்து
காத்திருக்கிறது
வலை.
மூக்குவைத்து காத்திருக்கிறது
நாரை.
வாய் பிளந்து காத்திருக்கிறது
பெரிய மீன்.
நாக்கு வைத்து காத்திருக்கிறது
தூண்டில் முள்.
கால் வைத்துக் காத்திருக்கிறது
கொக்கு.

இவற்றில்
ஏதாவதொன்றில் சிக்கி
மீன் சாகத்தான் செய்கிறது
இவை அனைத்துக்கும் தப்பி
மீன் வாழத்தான் செய்கிறது.

**அ.நிலாதரன்**
(ஆ.விகடன் 08.01.14)

**காத்திருக்கும் வரை**
**நமது பெயர்**
**காற்றென்றே இருக்கட்டும்**
**புறப்பட்டு விட்டால்**
**புயலென்று புரிய வைப்போம்**

**மு.மேத்தா**

# உயிரின் ஓசை

யார் நீ? என்ன செய்கிறாய்?
எங்கே யோகிறாய்? எப்படி வாழ்கிறாய்?
ஓங்கி ஒலிக்கிறதென் உயிரின் ஓசை!
உருண்டு போன காலச் சக்கரத்தில்
உதிர்த்து போன நிகழ்வுச் சுழலில்
உருக்குலைகிறதென் உயிரின் ஓசை!

இயற்கையனர்த்த இடிபாடுகளுக்குள்ளும்
இடிந்துவிழாத உள்ளம் கண்டு
சிலிர்த்தெழுகிறதென் உயிரின் ஓசை.

விசுவாசம் வெறும் பெயரிலா? உயிரிலா?
வீரத் தியாக மனித மலைகளில்
வியத்து அதிர்கிறதென் உயிரின் ஓசை.
அந்நியம் மறைய அந்நியோன்யம் நிறைய
அமைதிவழி வாழும் அன்பாளர் காண
அமைதிவழி வாழும் அன்பாளர் காண
ஆனந்தம் கொள்கிறதென் உயிரின் ஓசை

இரத்த உறவை இணைத்து வாழும்
இனிய பண்பின் நல்லறம் கண்டு
இன்பத்தில் திளைக்கிறதென் உயிரின் ஓசை.
கண்ணியம் பெறத்தகு பெற்றோர் பார்த்து
களிப்பின் விளிம்பில் என் உயிரின் ஓசை.
அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடித்த
அணி திரள் கூட்டம் அற்புதம் காண
ஆர்ப்பரிக்கிற தென் உயிரின் ஓசை!

கசடறக் கற்க அழகு மொழியை
கருத்துடன்விளங்க புனித அல்குர்ஆனை,
கணமும் ஏங்குது என் உயிரின் ஓசை

“திருப்தியடைத்த ஆத்மாவே” என அவன்
திருப்பி என்னை அழைப்பானா? என்று
திகிலடைகிறது என் உயிரின் ஓசை

கலாபூஷணம் ஆர்.ஆர்.ஹஸீமா
நீர்கொழும்பு

# அல்லாமா இக்பால் நினைவுகள்

இஸ்லாத்தைப் பரவலாக்கி
இனிய பல கவிதையாத்து
முஸ்லீம்கள் அற நெறியில்
மூழ்கச் செய்தகவிஞரிக்பால்!

உருது மொழி ஆங்கிலமும்
உயர் கல்வி ஆளுமையும்
பொருள் குவிந்த கவிதை வளம்
புரட்சிக் கெல்லாம் புகழாரம்!

தத்து வத்தில் வேந்தனவன்
தந்தளித்த கவிச் சாறு
இத்தரையில் வேறெங்கும்
இற்றை வரை படைக்கவில்லை!

ஒப்பரிய கலை ஞானம்
உவகை யுறு அன்பாளன்
செப்பரிய நீதி நெறி
சேர் முஹம்மத் இக்பால்

அன்னார் தம் நினைவின்று
அகிலமெலாம் போற்றி செய்ய
நன்மையுறு கவிப்பாவால்
நலமருள பிராஈத்திப்போம்

அல்லாமா இக்பாலே
அண்ணலே ஆய்ந்தோனே
நல்லார் போல் நும்புகழும்
நானிலத்தில் நிலைபெறுக!

**மூதூர் கலைமேகம்**

# எழுவாய் பயனிலை

காதலித்து
கண்ணாம் மூச்சியாடி
நீ இன்று
தாய்மைக் கோலத்தில்
தயவாய் வாழ்ந்த படி!

கவிதை எழுதியே
காகிதமாகி
சேற்றில் புதைந்த
செருப்பாய் நான்!

இதயத்தின் வெடிப்புக்களில்
இம்சையின் சித்திரவதை....
உள்ளார்ந்த மனவெளியில்
இன்பமினி எவ்வகை?

இலக்கியமாய் எமைப்
பார்த்தால்
நீ எழுவாய் நான் பயனிலை.....
சேர்ந்திருந்த நாள் எல்லாம் -
இனி
என்ன நினைத்தாலும்
பயனிலை!!!

**தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா**

# அம்மா நீ எனக்கு அடிக்க வேண்டும்

அம்மா......!
நீ எனக்கு அடிக்க வேண்டும்!
நான் அழும் போது
என்னை ஆரத் தழுவி
நீ முத்த மிடுகின்ற – அந்த
இன்ப சுகத்தை
நான் மீண்டும்
அனுபவிக்க வேண்டும்!

வலிகள் மறந்து
வேதனைகள் மறந்து
எனக்குள் ஏற்படுகின்ற
இன்ப உணர்வுகளால்
உன் மடிமீது தலைசாய்த்து
நான் தூங்குகின்ற
அந்த-சில கணத்துச் சுகங்களை
மீண்டும் பெற வேண்டும்!

உன் சேலைத் தலைப்பு
முடிச்சிக்குள்
பதுங்கிக் கிடந்த
நாணயங்களிற் சிலதை
நானெடுத்துச் சென்று
"போல" விளையாடும் போது
என் காதைப் பிடித்துத் திருகி
முதுகில் கொடுத்த அடி
இன்னும் பசுமையாய்
அப்படியே நினைவில் இருக்கிறது!

அழுது நின்ற என்னை
தோளில் தூக்கிக் கொண்டு
நீ வந்த போது
நானடைந்த ஆனந்தம்
அதைச் சொல்ல என்னிடம்
எழுத்துக்களுமில்லை
வார்த்தைகளுமில்லை
அம்மா.....!
நீ அடித்த அடிகள் எல்லாம்
என்னை செம்மைப் படுத்தியது
எனக்குள்
சுகத்தையும் தந்தது!

என் அன்புத் தாயே!
நீ இல்லாத
இந்தப் பொழுதுகளில்
எனக்கு சுகமுமில்லை
மீண்டும்
செம்மை பெற வழியு மில்லை
அம்மா......!
கனவில் வந்தாவது,
நீ என்னை
மீண்டும் அடிக்க வேண்டும்
உன்
அன்புக் கரங்களின் சுகத்தை
நான் அதில்
உணர வேண்டும்!

**கலாபூஷணம் பீ.ரீ.அஸீஸ்**
கிண்ணியா-07

# வெப்பம்

பாயும் நதிகள் பதுங்கி ஒழிய
பச்சை மரங்கள் பசுமை இழக்க
உயர்நீர் நிலைகள் உலர்ந்துபோக
உச்சிக் கதிரோன் உறிஞ்சும் நீரை.

வீசும் காற்றும் விலகிப் போக
வீட்டில் எங்கும் வெக்கை பரவ
தூசும் நிறைந்து தும்மல் ஒலிக்க
தூய்மைச் சூழல் தொலைந்து போகும்.

நித்திரை கெடுத்து நிம்மதி குறைத்திடும்
சித்திரைப் புழுக்கம் சினத்தைக் கூட்டிடும்
சில்லென வீசி சிலிர்ப்பை யூட்டிடும்
மெல்லிய தென்றலை மேனி நாடிடும்.

குடத்தைத் தூக்கி குடிநீர் தேடி
குமரியர் கூட்டம் குளத்தை நாட
குஷியாய் அங்கு குளிக்கும் இளைஞர்
குறும்புகள் செய்வதில் குறியாய் இருப்பர்.

உடம்பில் வியர்வை உருகி ஓடி
உதிர்ந்து மண்ணில் உலர்ந்து போக
உழைப்போர் தங்கள் உதிரம் சிந்தி
உரமாய் மாற உறிஞ்சும் உலகம்.

**தொன்மையூர் கவிராயர்**

# நினைவுகள்....


ஒவ்வொரு உதயத்தின் விடியலிலும்
உன் நினைவுகளுடன்
உறக்கம் கலைய
உலகைக் காணும் விழிகள்.

அழகான காட்சிகளைக் கண்டு
அனுபவிக்கும் ஆசையுடன்
அலையும் மனதில்
கவலை ஆட்கொள்ள
உன் அருகாமை இல்லாத தனிமை.

அத்தாழப் பொழுதின்
மத்தாப்பூ ஜாலங்கள்
விந்தை புரிகையில்
விரைந்து ஓடும் கற்பனைக் குதிரைகள்.

கால மாற்றத்திற்கு ஈடு கொடுக்க
இடம் பெயரும் பறவைகளின்
சரணாலயமாய் என் இதயம்
இன்னும் உன் எதிர்பார்ப்புக்களுடன்.

எத்தனையோ இருந்தும்
அத்தனையும் அனுபவிக்க முடியாமல்
முற்றும் துறந்தவனாய்
நான் வாழ
நிரந்தரமாய் இழந்து போகும்
நீ இல்லாத உலகம்.



**மாவலி மைந்தன்**

# மாற்றங்கள்

மாற்றங்கள் நடந்தேறல் இயல்பு நிகழ்வதாம்
மனிதவாழ்வில் மாண்புறு இயற்கைதம்மில்
மிருகம,பறவை மற்றும் உயிரினங்களில்
நிலம்,நீர்,கடல்,மலை அமைப்பில் எங்கும் மாற்றங்கள்.

உண்ணும் உணவில் அணியும் ஆடையில்
உற்றிடும் மாற்றம் கால ஓட்டத்தில் தெரியும்
கலா சாரம், பழக்கவழக்கம் மனித சமூக
அமைப்புக்கள் எங்கிலும் மாற்றங்கள் உண்டாமே!

மிருகம்,பறவை உயிரினங்கள் கூட
இருப்பிடம் உணவை மாற்றிடும் பாங்கை
உருப்படும் உறவை மாற்றீடாய் அருந்தலும்
பருவகாலம் ஒட்டி வாழ்வுமுறை திருப்பமும் காணலாம்.

நிலமோ, நீரோ கடலால் உட்கொண்டிடல்
நீர் நிலைகள் நிலமாய் ஆகித் தோற்றம் கண்டிடல்
காடு,வனம்,மலை நாடாய் நகராய் அமைந்திட
பாடாய் அமைந்த ஊர்கள் சிதைந்து காடாய் ஆகிடுதல் மாற்றமே!

மனிதப் போர்கள் பயங்கர மாற்றம் உண்டுபண்ணுது
புனித நிலையைச் சீர் குலைத்து நாடு நகர் அழித்து
ஆட்சியாளர் தொடுக்கும் போரில் மக்கள் அழிந்து பட்டு
அல்லற்பட்டு இல்லம், நிலம் இழந்து அகதிகள்,
அங்கவீனர் ஆவதும் மாற்றமேயன்றோ?

(வெலிப்பன்னை அத்தாஸ்)

கடந்த 15.12.2013ஆம் திகதி இறையடி எய்திய எமது பிரதேசத் சுவிஞர்

**மூதூர் ஜாபீர்** அவர்களின் நினைவாக எழுதப்பட்ட கவிதை

# நினைத்துப் பார்க்கிறேன்............

நாளும் ஒரு பொழுதும்
நான் தூங்கி எழும் பொழுது
நாயனைப் பிராத்திப்பதாய்
நயமுடன் அனுப்பும் உங்கள்
குறுந் தகவல் தொடரினி
முற்றுப் புள்ளி யானதுவே...........

குறுந் தகவல் கண்டு தினம்
குமுறும் என்னுள்ள மெலாம்
எனக்காகப் பிராத்திப்பதாய்
ஏகனிடம் வேண்டியதாய்
ஏக்கப் பெருமூச்சு என்காதில்
உனக்காகப் பிராத்திக்கச் செய்யும்.

“மூதூர் ஜாபீர்” என்று
பத்திரிகையில் பார்த்தவுடன்
பரவசப் படுவேன் மறுகணமே
வாழ்த்தும் சொல்வேன்............
குடும்ப உறவினன் என்றாலும்
“கலைக்” குடும்ப கதா நாயகன்.

வானொலி பத்திரிகை என்று
வாகையாய் கவி தொடுப்பாய்
மௌத்து நிச்சயம் என்று
மௌனத்தும் கலங்காமல்
அல்லாஹ் போதுமானவன்... என்று
அடிக்கடி சொல்லும் உன்
வார்த்தை
காதோரம் வந்து விழும் ... அன்று
இன்று... என் விழியோரம்
நீர் வழிகிறது.
என் தந்தை வழி உறவினன் நீ
என்பதாலா சிந்தையுடன்
சிந்து படித்தாய்.....
வார்த்தைகள் ஒவ்வொன்றும்
வாழும் வரை என்னிதயம்
வாழ்த்தி நிற்கும் உங்களுக்காய்
பிரர்த்திக்கும்.........
“ஜன்னத்துல் பிர்தௌசில்”
சுகமாக நீங்கள் வாழ
சோபனங்கள் நான் கூறி
செய்த பிழை பொறுத்திடவே
தூயோனை வேண்டுகிறேன்.

மூதூர் சுஹைதா ஏ.கரீம்

# எழுதுவேன்

பொறு மகனே பொறு!
எழுதி விட்டு வருகிறேன்
பொறு மகனே பொறு!

எதிர்காலம் உனதே
எனதல்ல......
மலைகளை அகற்றிய
மூடக் கிழவனின்
கதை தெரியுமா உனக்கு......
மலைகள் வளராது –
சிதைத்துக் குறைக்கலாம்.........
நான் இறந்தால்..... நீ
உன்னைத் தொடர்வான்
உன் பிள்ளை
எதிர்காலம் உனதே!

அடிமைச் சகதியில்
புதைந்து கிடக்கும் நீ
எழ வேண்டும்! எழ வேண்டும்!
கோடிக்கால் பூதமாய்.....
தளை அறுத்து எழு மகனே....
கதிர் தெறிக்கும் பரிதியென....

ஹே ஹன்ஸல்லா...!
வில் லெடுத்து போர் புரிந்தோம்......
"ஷெல்" லடித்துப் போர் புரிந்தோம்
நான்
'சொல்' லெடுத்துப் போர் புரிவேன்
நீ.... சிறு
"கல்" லெடுத்துப் போர் புரிவாய்!

(ஓ பலஸ்தீனமே, நஜீ-அல்-அலியும் ஹன்ஸல்லாவும்)

பெயர்ப்பு :- கலைவாதி கலீல்

இனிய இலக்கிய நெஞ்சங்களே, ஓசையின் ஒரு வேண்டுகோளை மீண்டும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம். சகல வகையிலும் வளப்பற்றாக்குறையுடன் வெளிவரும் ஒரு சிக்கனச் சிற்றிதழ் இது. கவிதைக் களத்தில் பலருக்கும் இடம் கொடுக்க வேண்டிய அவசியத்தில் உள்ளோம். எனவே உங்கள் கவிதைகளை தயவு செய்து மூப்பது வரிகளுக்கு மேற்படாமல் எழுதியனுப்புக்கள். இது உங்கள் கவிதா ஆற்றலுக்கு தடை அல்ல. எமது அன்பான வேண்டுகோள். உங்கள் அதரவைத் தோடர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

ISSN – 2012 - 8126

Editor, osai, Kinox Road , Mutur – 05
TL : 077-4203500